# பாடசாலைச் சமூகத்துக்கு அச்சுறுத்தல் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு!

## மனித உரிமை ஆணைக்குழுவில் ஆசிரியர் சங்கம் மேற்கொண்டது



பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அச்சுறுத்துவதும் விசாரணைக்கு உட்படுத்துவதும் மனித உரிமை மீறல் எனச் சுட்டிக் காட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளது. மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜிடம் இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் இன்று முறைப்பாட்டைக் கையளித்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 20 திங்கட்கிழமை 02.04.2024 கதிர் 217

## நாவாந்துறை மீன் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு மாநகர சபைக்கு தெரியப்படுத்தியும் அசமந்தம்!

### பிரதேச மக்களும் வியாபாரிகளும் குற்றச்சாட்டு

யாழ் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாவாந்துறை மீன் சந்தையானது யாழ்ப்பாணத்தின் மிக முக்கியமான மீன்சந்தையாகும்.

இங்கு மரக்கறிகள், இறைச்சி வகைகள், மீன்கள் விற்பனை நிலையம் என பலதரப்பட்ட விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன .

அத்தோடு இப்பகுதி அதிகளவான மக்கள் ஒன்று கூடும் சந்தை தொகுதியாகவும் காணப்படுகிறது. ஆனால், இந்த மீன் சந்தையானது போதிய பராமரிப்பு வசதிகள் இன்றி காணப்படுவதாக பிரதேச மக்களும் வியாபாரிகளும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் பலமுறை 2➤

## வடக்கு, கிழக்கில் நாளை முதல் வெப்பநிலை மேலும் அதிகரிப்பு



நாளை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் வெப்ப நிலை மேலும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும், கரையோரப் பகுதிகளில் ஓரளவு வெப்பம் குறைவாகக் காணப்பட்டாலும் உள்நிலப்பகுதிகளில் வெப்பநிலை மிக உயர்வாகக் காணப்படும் என்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா அறிவித்துள்ளார் இது தொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"நாளை முதல் வடக்கு மாகாணத்தின் வவுனியா,மாங்குளம், 2➤



## தேர்தலையொட்டி எதிர்க்கட்சிகளின் பரந்த கூட்டணி அமைக்கப்படுகிறது!

### மைத்ரியுடன் பேச்சு இல்லை என்கிறார் ஜீ.எல்.பீரிஸ்

நடைபெறவுள்ள தேர்தலையொட்டி எதிர்கட்சிகளினால் பரந்த கூட்டணியொன்று கட்டியெழுப்பப்படுவதாகவும், ஆனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இது குறித்து தாம் எந்த கலந்துரையாடலையும் மேற்கொள்ளவில்லை என சுதந்திர மக்கள் சபை உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எம்.பி. தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலின் போது, மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியாகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தவராவார், அப்படியான நிலையில் தற்போது தேர்தல் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் திடீரென அவர் ஈஸ்டர் தாக்குதல் குறித்து பேசியிருப்பது ஏன் என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது எனவும் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஜி.எல். அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின், அதற்கான அதிகாரம் சட்டமா அதிபருக்கே உள்ளது எனவும் தெரிவித்த அவர், மனித உரிமைகள் பேரவையும் இந்த தாக்குதல் குறித்து கவனித்து அவதானித்து வருவதும் கவனத்திற்குரியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெசி-12)

## இலங்கையில் வரிச்சலுகையால் 56 சதவீத வருமானம் இழப்பு!

கடந்த 2020ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரிச்சலுகை காரணமாக சுமார் 56 சதவீத வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஆய்வொன்றில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

Verité Research இனால் நிர்வகிக்கப்படுகின்ற இலங்கையின் முதன்மையான பொருளாதார நுண்ணறிவு தளமான PublicFinance.lk யினால் இந்த தகவல் பகிரப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதி அமைச்சினால் 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட 'வரிச் செலவின அறிக்கை' என்ற ஆவணத்தை மூலமாகக் கொண்டே இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை வழங்கிய பல்வேறு சிறப்பு வரிச் சலுகைகள் காரணமாக இழக்கப்பட்ட மொத்த வருவாய் குறித்த அரசாங்கத்தின் மதிப்பீடுகளை இந்த ஆவணம் சுட்டிக்காட்டுகின்றது.

## தொழிற் சங்கங்களின் அரசியல் நலனுக்காகவே சுகாதார ஊழியர்களின் போராட்டங்கள் ஏற்பாடு!

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு



சட்டவிரோதமான மற்றும் நியாயமற்ற கோரிக்கைகள் காரணமாக, சுகாதார ஊழியர்களின் வேலைநிறுத்தங்கள் நீர்த்துப்போயுள்ளன, அதுமட்டுமன்றி அவர்கள் அதிகாரிகளினாலும் நாட்டு மக்களினாலும் நிராகரிக்கபட்டுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட ஷரூ.35,000 உதவித்தொகையை காரணம் காட்டி தொழிற்சங்கத் தலைவர்களின் கோரிக்கையின் பேரில், சுகாதார ஊழியர்களை வீதிகளுக்கு வரவழைத்து, வேலைநிறுத்தம் செய்து, மருத்துவமனை கட்டமைப்பு செயற்பாடுகளை முடங்கச் செய்யும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர் எனவும் மேற்படி சங்கத்தின் ஊடக பேச்சாளர் சமில் விஜேசிங்க நேற்று (01) குற்றஞ்சாட்டினார். 2➤



## ஞானசார தேரருக்குப் பிணை மனுவை நிராகரித்தது மன்று!

4 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரரை பிணையில் விடுவிக்கக் கோரிய மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தற்போது விதிக்கப்பட்டுள்ள 4 வருட சிறைத் தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதி ஞானசார தேரரை பிணையில் விடுவிக்குமாறு கோரி அவரது சட்டத்தரணிகள் இந்த பிணை கோரிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர். இந்நிலையில் ஞானசார தேரருக்கு தண்டனை விதித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே பிணை மனுவை நிராகரிக்கும் தீர்ப்பினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாவாந்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநகர சபைக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் கண்டுகொள்ளாது கடந்து செல்வதாக வியாபாரிகளும் பிரதேச மக்களும் குற்றம் சுமத்தியுள்ளனர் .

மேலும், மீன் சந்தையில் போதிய சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் பணிகள் இடம்பெறாமையால் இங்கு துர்நாற்றம் வீசுவதுடன் புழுக்கள் உருவாகி விற்பனை நிலையங்களுக்குள்ளும் புகுந்துள்ளன.

இதனால் பலவகையான தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாகவும்

இதன் காரணமாக சந்தைக்கு வரும் நுகர்வோர் தற்போது அங்கு வருவதை தவிர்த்து வருவதாகவும் வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர் .

அத்தோடு மாநகர சபையால் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான மலசல கூட வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள், வடிகாலமைப்பு வசதிகள் அத்தனையும் அற்ற நிலையில் இந்த சந்தை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது .அத்தோடு வியாபாரிகள் தாங்களாக முன்வந்து சந்தைத் தொகுதியை துப்பரவு செய்ய முயற்சித்தாலும் நீரிறைக்கும் இயந்திரம் இன்மையால் துப்பரவுப் பணிகளைச் செய்ய முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சுத்தப்படுத்தாமல் கைவிடப்பட்ட வடிகாலமைப்புக்களையும், நீர் வசதி மற்றும் மலசலகூட வசதிகளையும், உரியமுறையில் கழிவுகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகளையும் செய்து தருமாறு உரிய அதிகாரிகளை வியாபாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (04)

## பாடசாலைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த வாரம் நடைபெற்ற யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டியின் இல்ல அலங்காரங்களில் மாணவர்களின் வெளிப்பாடுகள் தொடர்பாக தெல்லிப்பழைப் பிரிவு பொலிசார் மாணவர்களையும் ஆசிரியர்களையும் விசாரணைக்கு அழைத்தமையும் விசாரணைக்கு உட்படுத்தியமையும் அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற நடவடிக்கையாகும்.

இலங்கை அரசியலமைப்பின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் கலை ரீதியாகவும் குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் பாடசாலை மட்ட இல்ல விளையாட்டுப் போட்டி அலங்காரங்களில் மாணவர்களின் பாடசாலை மட்ட வெளிப்பாடுகள் இலங்கை அரசியலமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சிச் சுதந்திரத்திற்கு உட்பட்டதாகும்.

இத்தகைய சுதந்திரங்களை மதிக்காத தெல்லிப்பழைப் பொலிசாரின் அச்சுறுத்தல்களுடன் கூடிய விசாரணைச் செயற்பாடானது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுடன் பாடசாலை நிர்வாகத்தினர் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கின்றதுமான செயற்பாடுகளாகும், என்று தெரிவித்து - கல்விச் செயற்பாடுகளில் தெள்ளிப்பழைப் பொலிசாரின் அவசியமற்ற நடவடிக்கைகள் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டினைக் கோரியுள்ளனர்.

இதேவேளை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கடந்தவாரம் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது இல்ல அலங்காரங்களில் கவச வாகனங்கள் மற்றும் காந்தள் மலர் போன்ற தோற்றத்தில் அலங்காரம் செய்திருந்ததாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை அழைத்து பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலைமையிலே அதிபர், ஆசிரியர், மாணவர்களை விசாரணைக்கு உட்படுத்தியமை மனித உரிமை மீறல் எனவும் பொலிஸாரின் இத்தகைய அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறிகண்டி, நட்டாங்கண்டல், துணுக்காய், ஓமந்தை, கரிப்பட்ட முறிப்பு, சின்னத்தம்பனை, பாலைப் பாணி, மூன்றுமுறிப்பு, ஐயன் குளம், மடு,கீரி சுட்டான், தட்டாங்குளம், பகுதிகளில் பகல் காலை 10.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை பகல் பொழுது வெப்பநிலை 41 பாகை செல்சியஸ் இனை அண்மிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் உள்நிலப்பகுதிகளின் பல இடங்களில் வெப்ப அலைகள் வீசுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

வெப்பச்சலனம் காரணமாக ஆங்காங்கே ஒரு சில இடங்களில் பிற்பகல் 2.00 மணிக்கு பின்னரும் காலை 7.00 மணிக்கு முன்னரும் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆனாலும், இம்மழை அதிகரிக்கும் வெப்பநிலையின் பாதிப்புக்களை தற்காலிகமாக தணித்து குறுகிய காலத்திற்கு மட்டுமே சௌகரியமான வானிலையை உருவாக்கும்.

முன்னைய பதிவொன்றில் குறிப்பிட்டது போல், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை வெப்பநிலை உயர்வாகவே இருக்கும். எனவே, அதிகரிக்கும் வெப்பநிலை, வெப்ப அலை தொடர்பிலும் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது. அதிகரித்த வெப்பநிலையைக் கருத்தில்கொண்டு எமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வது உசிதமானது" - என்றுள்ளது. (அ)

## தொழிற்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிற்சங்க தலைவர்கள் அவர்களின் தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக சுகாதார பணியாளர்களை பயன்படுத்துவதாகவும், இந்தப் போராட்டம் பொதுவாக இந்நாட்டிலுள்ள தொழிற்சங்க இயக்கங்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ரெசி-13)

## தமிழரசுக் கட்சி - தேசிய மக்கள் சக்தி இடையில் விரைவில் சந்திப்பு?

தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சுமந்திரன் எம்.பியை மேற்கோள் காட்டி தென்னிலங்கை ஊடகங்கள் இது தொடர்பான செய்தியொன்றை வெளியிட்டுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக அநுர குமார திசாநாயக்க அண்மையில் கூறியிருந்தார். அதன் பின்னணியில் சுமந்திரன் எம்.பி.யை மேற்கோள் காட்டி மேற்குறித்த செய்தி தற்போது வெளியாகியுள்ளது.

அதன் பிரகாரம், அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றிய தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு குறித்து தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் விசாரித்தறிந்து கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளனர், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## வவுனியாவில் மூன்று பிள்ளைகளின் தந்தை கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

வவுனியா, செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலியார்குளம் பகுதியில் கிணற்றிலிருந்து மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் நேற்று மாலை தனது வீட்டிலுள்ள கிணற்றுக்குப் பக்கத்திலுள்ள வாழைமரத்தின் குலையை வெட்ட முற்பட்ட சமயத்தில் தவறி கிணற்றினுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற செட்டிக்குளம் பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## சுற்றுலா வாகன இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதியளிப்பு!

*சுற்றுலாத்துறையின் தேவைக்காக வான் மற்றும் சிறிய பேருந்துகளை இறக்குமதி செய்வதற்கு சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை, அந்த வாகனங்களின் இறக்குமதிக்கு சிறப்பு வரிச் சலுகைகள் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்*

*அதன்படி 6-15 இருக்கைகள் கொண்ட (மின்சார மற்றும் ஹைபிரிட் உட்பட) வான்கள் மற்றும் 16-30 இருக்கைகள் கொண்ட மினிபஸ்கள் மற்றும் 30-45 இருக்கைகள் கொண்ட பேருந்துகள் - குறிப்பாக சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக இறக்குமதி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*

*(04)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் வருடாந்த இப்தார் நோன்பு நிகழ்வு



(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் வருடாந்த இப்தார் நோன்பு நிகழ்வு பிரதேச செயலாளர் தேசபந்து எஸ். எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக முன்றலில் நேற்று (01) நடைபெற்றது.

சமூக நல்லிணக்க இப்தாராக இடம்பெற்ற இந்நிகழ்வில், நோன்பின் மாண்புகளைப் பற்றி சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அறாபீக் கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி எஸ்.எல்.எம் முப்தி றிஸ்வான் (அஹாரி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம் மன்சூர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஐ.எம் மாஹிர், முன்னாள் அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம் நஸீர், மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.எல் ஆதம்பாவா, மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி அஹமட் சாபீர், சம்மாந்துறை மஜ்லிஸ் ஹூரா தலைவர் எம்.ஐ.எம் அமீர் (நளிமி), உலமா சபை தலைவர் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள், பிரதி, உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், வர்த்தக சங்க மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு பிரதேச செயலக நலனோம்பல் அமைப்பின் நெறிப்படுத்தலிலும் ஒழுங்குபடுத்தலிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது



# தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கி வைப்பு

(ஹஸ்பர் ஏ. எச்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய தமிழ் பிரதேசங்களில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் கணினி, கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத சூழல் நிலவுகின்றது.

அந்தவகையில் வெருகல் கோட்டத்தில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக்கல்லூரி, திருவள்ளுவர் வித்தியாலயம் மற்றும் துவாரகா வித்தியாலயம், மூதூர் வலையத்தில் உள்ள கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம், இலிங்கபுரம் தமிழ் வித்தியாலயம் மற்றும் ஆதியம்மன் கேணி தமிழ் வித்தியாலயம், மொறவெவ கோட்டத்தில் உள்ள அவ்வை நகர் தமிழ் வித்தியாலயம், குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள திரியாய்த் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் விவேகானந்தா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கணிதம், கணினி மற்றும் அறிவியல் கற்பிக்க ஆசிரியர் இல்லை. தமிழ் மாணவரது கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகக் கல்வித்துறையின் வேண்டுகோளுக்கமைய திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் மேற்படி பாடசாலைகளுக்குத் தொண்டர் ஆசிரியர்களை நியமித்து மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கி வருகின்றது. 2024 கல்வி ஆண்டுக்கான பங்குனிமாதக் கொடுப்பனவு கடந்த மார்ச் 30 ஆம் திகதி வழங்கப்பட்டது.

திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிர்வேலு சண்முகம் குகதாசன், கனடா திருக்கோணமலை நலன்புரிச் சங்கத் தலைவர் தங்கவடிவேல் ரகுநாதன், அதன் நிர்வாக உறுப்பினர் க. இலங்கேஷ்வரன் ஆகியோர் இக்கொடுப்பனவுகளை வழங்கினர்.

# சென்னை சவீதா சட்டக்கல்லூரியில் பேரா. முஸ்தபா தொடக்க உரை

(நவாஸ்)

சட்டத்தின் கண்ணோட்டத்தில் இலத்திரனில் நிதியியல் எனும் தொனிப்பொருளில் ஆய்வுக்கருத்தரங்கு அண்மையில் இந்தியாவின் சென்னை சவீதா சட்டக்கல்லூரியில் இடம்பெற்றிருந்தது.

இந்திய கல்வியியல் ஆராய்ச்சியாளர்கள் சங்கமும் இந்திய கணக்கியல் சங்கமும் இணைந்து சென்னை சவீதா சட்டக்கல்லூரியில் ஏற்பாடு செய்த "சட்டத்தின் கண்ணோட்டத்தில் இலத்திரனில் நிதியியல்" எனும் தலைப்பில் இந்த இரண்டு நாள் ஆய்வுக்கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கருத்தரங்கின் தொடக்க உரையினை இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழககத்தின் வியாபார பொருளியல் துறை பேராசிரியரும், முகாமைத்துவ பீடத்தின் முகாமைத்துவ துறைத்தலைவருமான பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் பங்கேற்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் சனிக்கிழமை நல்லூரில்



எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர் த. இராமலிங்கம் பங்குகொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகள் அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஆதீன பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலக இயக்குநரும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய இ.சர்வேஸ்வரா தலைமையில் காலை 9 மணிக்கு இடம்பெறும் காலை அமர்வில் பட்டிமன்றங்களில் பேசும் ஆர்வமுள்ள இளையோருக்கான பயில்களம் இடம்பெறவுள்ளது.

செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள மாலை அமர்வில் இலக்கியச்சுடர் த.இராமலிங்கத்தை நடுவராகக் கொண்டு சிந்தனை அரங்கம் இடம்பெறவுள்ளது.

இளைஞர்களின் எதிர்காலத்தை ஆகச்சிறப்பாகச் செப்பனிடுவது எந்தச் சூழல் என்ற பொருளில் இடம்பெறும் சிந்தனை அரங்கில், வீட்டுச் சூழலே என தென்னாடு ஆசிரியர் ஜீவா சஜீவனும், கல்விச் சூழலே என மருத்துவபீட மாணவி ந.அபிராமியும், நட்புச் சூழலே என உதவி விரிவுரையாளர் விக்கி. சாரங்கனும், சமுதாயச் சூழலே என தமிழ்நாடு தேவகோட்டை வி.யோகேஸ்குமாரும் கருத்தாடவுள்ளனர்.

# தர உத்தரவாதம் இல்லாத ரூ.60 மில்லியன் மதிப்புள்ள 'ஜீவனி' பக்கட்கள் சுகாதார அமைச்சால் கொள்வனவு

## தொழிற் சங்கங்கள் குற்றச்சாட்டு



தர உத்தரவாதம் இன்றி தொழிற்சாலையொன்றில் உற்பத்தி செய்யப்பட்டதாக கூறப்படும் 60 மில்லியன் ஷரூபாவிற்கும் அதிக பெறுமதியான 12 இலட்சம் 'ஜீவனி' பக்கட்டுகள் சுகாதார அமைச்சு மற்றும் அரச மருந்து ஒழுங்குமுறை கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

'ஜீவனி' பக்கட் கையிருப்பின் பதிவு அவசியமற்றதற்கான சான்றிதழை வழங்கி அதனை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் கடந்த வருடம் டிசம்பர் மாதம் தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியிருந்ததாகவும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்திற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் அனுப்பியுள்ள பதிலில், உள்ளூர் மருந்துகளுக்கான நம்பகத்தன்மை சான்றிதழை வழங்குவதாக தெரிவித்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், சுகாதாரத்துறை அமைச்சர் தலைமையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, தர உத்தரவாதம் இல்லாவிட்டாலும் இந்த பெக்கட்டுகளை பெற்றுக் கொள்ள முடியும் என, மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர், மேலதிக செயலாளரிடம் தெரிவித்திருந்ததாகவும் சுகாதார சங்கங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ரெசி-08)

# யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் இரு வன்முறைக் கும்பல் மோதல்

## 22 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் இரண்டு வன்முறைக் கும்பல்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் 22 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலான 5 மணி நேரத்தில் மேற்படி 22 பேரும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குறிப்பிட்ட நேரத்துக்குள் திடீரென அதிகளவானோர் சிகிச்சைக்காக வந்தமையால் வைத்தியர்களும் சிறிது நேரம் நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

இதேவேளை, சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்கள், அவர்களுடன் உதவிக்கு வந்தவர்கள் ஆகியோர் வைத்தியசாலைக்குள்ளும் மோதலில் ஈடுபட முயன்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் சிலரைக் கைது செய்தனர். (அ)




# கொம்யூனிஸ்ட் கட்சியின் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் திட்டம் நாளை ஆரம்பிப்பு

## உண்டியலும் குலுக்கப்படுமாம்

நாளை (3) முதல் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி நாடு முழுவதும் துண்டு பிரசுரங்களை விநியோகிக்கும் வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக, கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான எல்.ஆர்.ஸ்டீபன் தெரிவித்துள்ளார்.

மேலும், ஸ்ரீலங்கா கொம்யூனிஸ்ட் கட்சியின் மே தினதிற்கான நிதி திரட்டலுகென உண்டியல் பிரச்சாரமொன்றையும் நாளை (3) முதல் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் மே தினப் பேரணி கிருலப்பனை அத்துலத்முதலி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரெசி-10)

# ரூ.2 கோடி மதிப்புள்ள கஜமுத்துக்களுடன் முன்னாள் இராணுவ அதிகாரி கைதானார்

நான்கு கஜமுத்துகளை இரண்டு கோடி ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கு தயாராக இருந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரை நேற்று (1) பிற்பகல் பேருவளை பொலிஸார் கைது செய்துள்ளனர். தர்கா நகர், மீகம பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தின் முன்னாள் அதிகாரியொருவர் இரண்டு கோடி ஷரூபா பெறுமதியான கஜமுத்துக்களை விற்பனை செய்யவுள்ளதாக விமானப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், பேருவளை, மருதானை பகுதியில் வைத்து மேற்படி நபரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்த நான்கு கஜமுத்துக்களையும் பொலிஸார் கைப்பற்றினர். சந்தேக நபர் களுத்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த ஏற்பாடாகியிருந்தது. (ரெசி-11)

# உறவினர்களுக்கிடையில் மோதல் துண்டாப்பட்டது இளைஞனின் கை

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு வாள் வெட்டில் முடிவடைந்ததில் இளைஞன் ஒருவர் மணிக்கட்டுடன் கையை இழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், புலோலி பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் செந்தூரன் (வயது 30) எனும் இளைஞனே மணிக்கட்டுடன் ஒரு கையை இழந்துள்ளார்.

புலோலி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் வாள் வெட்டில் முடிவடைந்தது. அதில் இளைஞன் ஒருவரின் கை மணிக்கட்டுடன் துண்டாடப்பட்டது.

படுகாயமடைந்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்

அதன்போது, துண்டாடப்பட்ட கையை வைத்தியர்கள் கேட்டபோது, கை சம்பவ இடத்தில் இல்லை என்றும், துண்டாடியவர்களே கையை எடுத்துச் சென்றிருக்கலாம் அல்லது தூக்கி வீசி இருக்கலாம் என்றும் படுகாயமடைந்த இளைஞனின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேகநபர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும், தற்போது அவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# பாலுறவு வயது குறைப்பு திருத்தச் சட்டமூலத்தை அரசாங்கம் மீளப் பெறுவதாக அறிவித்துள்ளது

வயதில் சிறிய பெண் பிள்ளைகளுடன் பாலியல் உறவு கொள்ளுதல் குற்றத்திற்கான தண்டனை விதிக்கும் வயதை 16 ஆகக் குறைக்க முன்மொழியப்பட்ட குற்றவியல் சட்ட (திருத்த) சட்டமூலத்தை அரசாங்கம் நேற்று (01) திரும்பப் பெற்றுக்கொண்டது.

அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் 13 ஆவது பிரேரணையாகக் குறிப்பிடப்பட்டிருந்த மேற்படி திருத்தச் சட்டமூலத்தை அரசாங்கம் மீளப்பெறுவதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த பிரேரணை சமூகத்தில் கடந்த காலங்களில் பெரிதும் பேசப்பட்டு வந்த நிலையில் இவ்வாறு வயதைக் குறைப்பதற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-09)



# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இப்தார் நோன்பு சிறப்பு நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு நேற்று (01) பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் இஸ்லாமிய நலன்புரிச் சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. சமய நல்லிணக்க விடயங்களை புரிந்து கொள்ளும் ஒரு சகவாழ்வு, சகோதர தத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் இது ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. நோன்பின் மகத்துவம் பற்றி ஜம்மியத்துல் உலமா சபையின் தம்பலகாமம் பிரதேச தலைவர் மௌலவி குசைன் பயான் நிகழ்த்தினார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி, உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சர்வமதத் தலைவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உரிமை வேலைத்திட்ட உத்தியோகத்தர்களுக்கு மெச்சுரை பத்திரம் வழங்கி கௌரவிப்பு

(சர்ஜ/ன் லாபீர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணத்தில் உருவான உரிமை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அரச காணிகளை நிபந்தனையற்ற ரீதியில் சுதந்திரமான முறையில் பூரண உரிமையாக அளிப்பு விடயத்தில் அகில இலங்கை ரீதியாக சம்மாந்துறை பிரதேசம் முதலிடம் பெற்றுள்ளது.



அண்மையில் தம்புளையில் இடம் பெற்ற நிகழ்வில் இதற்கு சான்றுப்பத்திரம் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ் வேலைத திட்டத்தை வெற்றிபெற பல வகையிலும் உதவி ஒத்தாசை வழங்கிய சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நேற்று (01) பிரதேச செயலாளர் எம். எச் முஹம்மது ஹனீபா தலைமையில் மெச்சுரை பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமில், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எப். சாஹீனா, கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காரைதீவு பிரதேச சம்பியனாக காரைதீவு விளையாட்டு கழகம்

(வி.ரி.சகாதேவராஜா)



காரைதீவு பிரதேச செயலகம் வருடாந்தம் நடத்தி வரும் பிரதேசமட்ட விளையாட்டுப்போட்டியில் இவ்வாண்டுக்கான ஒட்டுமொத்த சம்பியனாக காரைதீவு விளையாட்டு கழகம் தெரிவு செய்யப்பட்டது.

அக் கழகம் 20 தங்கப் பதக்கங்களையும், 16 வெள்ளிப்பதக்கங்களையும், 16 வெண்கலப்பதக்கங்களையும் பெற்று சம்பியனாக தெரிவாகியுள்ளது.

இரண்டாம் இடத்தை ஜொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகமும் மூன்றாவது இடத்தை விவேகானந்தா விளையாட்டு கழகமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த போட்டிகள் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

சம்பியனாகிய தமது கழகத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் கழகத்தின் தலைவர் பொறியியலாளர் வி.விஜயசாந்தன் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

# கல்முனை கடற்கரைப் பகுதிகளில் சுத்திகரிப்பு வேலைத்திட்டம்

(அஸ்லம் எஸ். மௌலானா)

சர்வதேச கழிவுகளற்ற தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளில் கடந்த சனிக்கிழமை (30) விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் பணிப்புரை மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் அவர்களின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸின் மேற்பார்வையில் திண்மக் கழிவகற்றல் பிரிவினரால் இச்சுத்திகரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் கழிவுகள் யாவும் அகற்றப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

றமழான் நோன்பு காலத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன் இப்பணிகளை சிறப்பாக மேற்கொண்ட அனைத்து ஊழியர்களுக்கும் மாநகர ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸ்மி நன்றி தெரிவித்துள்ளார்.

# அல்–ஹிலால் வித்தியாலயம் காஸா நிதிக்கு பங்களிப்பு



(நூருல் /ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம், கல்முனை கல்வி வலய, வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் மற்றும் கல்முனை கல்வி வலய கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் ஆகியோரின் வழிகாட்டலில், பலஸ்தீன் காஸா சிறுவர்களின் ஜனாதிபதி நிதியத்துக்கு நிதிப் பங்களிப்புகள் கையளிக்கப்பட்டுவருகின்றன.

அதன் தொடரச்சியாக சாய்ந்தமருது கமு.கமு.அல்–ஹிலால் வித்தியாலய ஆசிரியர்களினால் 225,000 ஷரூபா வலயக்கல்வி அலுவலகத்தில் நேற்று (01) பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் கலந்து கொண்டு வலயக்கல்வி பணிமனையில் நிதியைக் கையளித்தனர்.



# நீங்கள் வாக்களித்த கருணா எங்கே? கல்முனையில் அரிய நேந்திரன் கேள்வி

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மக்கள், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விட்ட தவறுக்காக கடந்த தேர்தலில் தண்டனை தந்தீர்கள். அதற்காக கருணாவுக்கு வாக்களித்தீர்கள். இன்று ஜனாதிபதியின் ஆலோசகர் என்றும் படையணி திரட்டுவதாகவும் கூறுகிறார். இப்பொழுது நீங்கள் போராடுகிறீர்கள். எங்கே அந்த கருணா?, இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் கல்முனை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலையில் கருத்துரைகையில் தெரிவித்தார்.

கல்முனையில்இன்று (2) செவ்வாய்க்கிழமை 9 வது நாளாக தமிழ் மக்களது போராட்டம் தொடர்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா. ஸ்ரீநேசன், பா.அரியநேந்திரன் ஆகியோர் சமுகமளித்திருந்தார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலையில் பா.அரிய நேந்திரன் மேலும் பேசுகையில், கடந்த முறை இங்கு நீங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்ட பொழுது ரணில்விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராக இருந்தார். அவர் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் ஒப்பத்தோடு இங்கு கணக்காளரை நியமிப்பதற்காக ஹெலிகொப்டரில் அனுப்பி வைத்திருந்தார். அது ஒரு திட்டமிட்ட நாடகம்.

அது அடுத்த நிமிஷம் காற்றோடு கலந்தது. ஏமாறினோம். அதே ரணில் விக்ரமசிங்க இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருக்கின்றார் .

அன்று இப்படியான கணக்காளர் நியமன போலி கடிதத்தை சமர்ப்பித்த ரணில் விக்கிரமசிங்க அன்று ஏமாற்றியவாறு இம்முறை ஜனாதிபதியாக இருக்கின்ற பொழுதும்ஏமாற்றுவாரா? என்பது தமிழ் மக்களுக்கு சந்தேகமாய் இருக்கின்றது.

நல்லாட்சியில்பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நிரந்தரமாக்குவதற்கான வாக்குறுதியை அளித்திருந்தும் இன்னும் அது நிறைவேறவில்லை. மாறாக இங்கு அதிகாரம் பிடுங்கப்படுகிறது. இதற்கு அடிப்படைப் பின்னணியிலே சில இஸ்லாமிய அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள் அதற்கு உயர் அதிகாரிகள் சிலரும் துணை போகிறார்கள். இன ரீதியாக தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள் . நாம் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்து இருக்கிறோம். அந்த வழக்கு தாக்கல் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற வேளையிலே இந்த அதிகாரங்களை பிடுங்குவதற்கு இந்த அரசாங்க அதிபர் அல்லது ஏனையோர் யார் என்பதைக் கேட்க விரும்புகின்றோம். இந்த நீதிமன்றத்தை அவர்கள்தான் அவமதிக்கிறார்கள்.



இந்த கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் தொடர்ச்சியாகவும் பூரணமாகவும் நாங்கள் பயணிப்போம். நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் அனைவரையும் நாங்கள் நம்புவதில்லை. தமிழ்த் தேசியத்துடன் சேர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமக்காக என்றும் குரல் கொடுப்பார்கள்.

அண்மையில் இந்தியாவிலே சிறையில் அடைக்கப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இடம் கையெழுத்திட்டு கையளித்து இருந்தார்கள். அதே தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களுக்கு உதவுவார்கள் என்பது நம்பிக்கையாக இருக்கின்றது.

ஆனால் டக்ளஸ், பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்கள் தமிழர்கள் இல்லை. அவர்கள் பெயருக்குத்தான் தமிழர்களாய் இருக்கிறார்கள்.

24 மணிநேரத்தில்இதனை தரமுயர்த்தித் தருவோம்!, என்று அன்று இங்கு வந்த பிள்ளையான் கூறினார். முழு கிழக்கையும் முடக்குவோம்!, என்று வியாழேந்திரன் கூறினார். மூன்று நாளிலே இதனை ஏற்படுத்தித்தருவோம்!, என்று கருணா கூறினார்.

இவர்கள் எல்லாம் இன்று எங்கே? என்று நான் கேட்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நீங்கள் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் நாங்கள் தொடர்ந்து இதற்காகக் குரல் கொடுப்போம் . எமது கட்சிக்குள் இருந்து அப்போதிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனை தடுத்திருந்தார்கள். அது யார் நீங்கள் அறிவீர்கள். இல்லாவிட்டால் அந்த நேரத்திலே அந்த அந்தஸ்து கிடைத்திருக்கும். இனி தேர்தல் வரும். எனவே காப்புக் கடை போடுவது போன்று அரசியல்வாதிகளும் இங்கு வரத் தொடங்குவார்கள். அப்பொழுது பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று! - என்றார்.

## யாழ் போதனா வைத்தியசாலையில் தொழிற்சங்கப் போராட்டம்

சுகாதார தொழிற்சங்கங்கள் இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

72 தொழிற்சங்கங்கள் இணைந்து 4 மணித்தியாலங்களுக்கு சேவையில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் இன்று ஈடுபட்டிருந்தனர். தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேற்று (1) இடம்பெறவிருந்த கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமையினால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சானக தர்மவிக்கிரம தெரிவித்திருந்தார். அதற்கமைய, இன்று (2) காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.








## அமெரிக்காவில் விபத்துக்குள்ளான கப்பல் இலங்கைக்கு வருகிறது?

இலங்கைக்கு வருகைத் தரும் வழியில், அமெரிக்காவில் விபத்துக்குள்ளான கப்பலில், சுமார் 764 கொள்கலன்களில் பாரிய கழிவுத்தொகை காணப்படுவதாகவும் 56 கொள்கலன்களில் வெடிபொருட்கள் காணப்பட்டதாகவும் நாடாளுமன்றில் இன்று சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கப்பலானது இலங்கை கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகக்கூடிய சந்தர்ப்பதம் காணப்படுவதாகவும் இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில், ”அமெரிக்காவின் கப்பலொன்று பாரிய கழிவுத்தொகையுடன் இலங்கை நோக்கி வருகைதருவதாக தகவல் வெளியாகியுள்ளது. நாடு என்ற ரீதியில் சிந்தித்த இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

இதற்கு முன்னரும் இவ்வாறான பிரச்சினைக்கு நாடு முகம் கொடுத்திருந்தது. சிங்கப்பூர் கப்பலான டாலியே இவ்வாறு இலங்கை நோக்கி பயணிப்பதாக தெரியவந்துள்ளது. அண்மையில் எமக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் அமெரிக்காவின் மேரிலேண்ட் வோல்டிமோர் பகுதியில் இந்தக் கப்பல் நங்கூரமிடப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் 4 ஆயிரத்து 644 கொள்கலன்கள் காணப்படுவதுடன் அவற்றில் 764 கொள்கலன்களில் கழிவுப்பொருட்கள் காணப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு தகவல் வழங்கப்படவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

குறித்த கப்பல் எதிர்வரும் 15 நாட்களுக்குள் கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது. இந்த கப்பலில் 1.8 மில்லியன் எரிபொருள் காணப்படுகின்றது. எனவே இந்த கப்பல் ஏதேனும் அனர்த்தத்தை எதிர்கொள்ளும் பட்சத்தில் நாடு பாரிய பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.

இந்த கப்பல் அனர்த்தத்திற்குள்ளாகக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக அமெரிக்க பாதுகாப்பு பிரிவில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது. எனவே அரசாங்கம் இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். முன்னதாக இரண்டு சந்தரப்பங்களில் நாட்டின் கடற்பிராந்தியத்தில் இரண்டு சர்வதேச கப்பல்கள் தீவிபத்துக்குள்ளானதில் பாரிய சேதம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது”, என்று தெரிவித்துள்ளார். (04)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக டபிள்யூ.கே.டி.விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும் புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2024இல் வெளியிடப்பெற்றது.